# இலங்கையர்களுக்கும் மற்றும் இலங்கையில் மற்றும் வெளிநாட்டில் வாழ்கின்ற நலன்விரும்பிகளுக்கும் இலங்கை மற்றும் அதன் மக்கள் மீது நல்லெண்ணத்தின் சைகையினை வழங்குவதற்கான ஒரு சந்தர்ப்பம்

## மேலதிக வட்டியுடன் சிறப்பு வைப்புக் கணக்கு

### முன்மொழியப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்கின் பிரதான அம்சங்கள்

1. **தகுதியுடைய நபர்கள்**
   - (அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வசிக்கின்ற இலங்கைப் பிரசை.
   - (ஆ) இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்கள்.
   - (இ) இலங்கை பூர்விகத்தை கொண்டிருக்கின்ற வேறு ஏதேனும் நாட்டின் பிரசாவுரிமையுடையவர்கள்.
   - (ஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கின்ற தேசிய பிரசாவுரிமை கொண்டிராதவர்கள்.
   - (உ) இலங்கைக்கு வெளியில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட நிதியங்கள், கூட்டு நிறுவன அமைப்புக்கள் மற்றும் சங்கங்கள்.
   - (ஊ) வேறு யாராகிலும் நலன் விரும்பிகள்.

2. **சிறப்பு வைப்புக் கணக்கினை எவ்வாறு திறந்த கொள்வது?**
   - i. இலங்கையில் நிதியினை வைப்பிலிடுவதற்கு விரும்புகின்ற தகுதியுடைய நபர்கள் இலங்கையின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரில் (ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) சிறப்பு வைப்புக் கணக்கினை திறக்கவும் பராமரிக்கவும் முடியும்.
   - ii. குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தலின் திகதியிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு வங்கி முறைமையினூடாக உள்முக பணவனுப்பல்களுடன் சிறப்பு வைப்புக் கணக்கு திறக்கப்பட வேண்டியுள்ளது.
   - iii. இலங்கையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கிப் பிரிவில் கணக்கினை வைத்திருக்கும் ஒரு நபர் அக்குறிப்பிட்ட கணக்கினூடாக நிதியினை அனுப்பி சிறப்பு வைப்புக் கணக்கிற்கு பணத்தினை வரவிலிடமுடியும்.

3. **சிறப்பு வைப்புக் கணக்கின் சிறப்பம்சங்கள்**
   - சிறப்பு வைப்புக் கணக்கானது குறைந்தளவு 06 மாதகால முதிர்ச்சியினைக் கொண்ட ஒரு நிலையான வைப்பு.
   - இலங்கை ரூபாவில் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில்* திறந்து கொள்ள முடியும்.
   - கூட்டுக் கணக்கினைத் திறக்க முடியும் .

4. **சிறப்பு வைப்புக் கணக்கினை திறப்பதிலான நன்மைகள் எவை?**
   - குறிப்பிட்ட வங்கிகளினால் சாதாரண நிலையான வைப்பிற்கு முதிர்ச்சியில் செலுத்தப்படுகின்ற வீதத்திற்கு உயர்வான வட்டி வீதம்.
     - 6 மாத கால வைப்புக்களிற்கு - சாதாரண வீதத்திற்கு உயர்வாக ஆண்டிற்கு 1 சதவீதப் புள்ளி.
     - 12 மாத கால வைப்புக்களுக்கு - சாதாரண வீதத்திற்கு உயர்வாக ஆண்டிற்கு 2 சதவீதப் புள்ளிகள்.
   - முதிர்ச்சியில் இலகுவாக மாற்றிக் கொள்ளக்கூடியவை மற்றும் இலங்கைக்கு வெளியில் பணவனுப்பல்களுடன் கூடியவை.
   - 2017.11.17 திகதியிடப்பட்ட 2045/56 இலக்கமிடப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டவை.
   - கொரோனா வைரஸ் (கொவிட் - 19) வெளித்தாக்கத்திலிருந்து உதவுவதற்கு இலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கு ஆதரவளிப்பதற்கு இலங்கையின் தேசபக்தர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் ஒரு சந்தர்ப்பம்.

* குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களானவை: ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுன், அவுஸ்திரேலிய டொலர்கள், சிங்கப்பூர் டொலர்கள், சுவீடன் குரோனர், சுவிஸ் பிராங், கனேடியன் டொலர்கள், கொங்கொங் டொலர்கள், யப்பானிய யென், டென்மார்க் குரோனர், நோர்வே குரோனர், சீனா ரென்மின்பி மற்றும் நியுசிலாந்து டொலர்கள் என்பனவாகும்.